19.07.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 24/2016</u>

அ.சா.18

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பா.கற்பகம் | | |
| க/பெ | அரவிந்தன் | | |
| **கிராமம்** | திருவண்ணாமலை | **தொழில்** | |
| **தாலுக்கா** | திருவண்ணாமலை | **வயது** | 47/2024 |
| **மாவட்டம்** | திருவண்ணாமலை | **தேதி** | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** உதவி பேராசிரியராக தோல்நோய் சிகிச்சை பிரிவில் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணி புரிகிறேன். கடந்த 13.04.2011ம் தேதி விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசியராக பணியில் இருந்தபோது சரவணன் வயது 27 என்பருடைய பிரேதம் கெடார் காவல் நிலைய ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் அந்த நிலைய காவலர் எண் 497 அச்சுதன் என்பவர் மேற்படி பிரேதத்தினை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை கோரிக்கை பெறப்பட்டது. 13.04.2011 பிற்பகல் 1 மணி அளவில் பிரேத பரிசோதனை ஆரம்பமானது. பிரேதத்தினை பரிசோதனை செய்ய அவரது கைகளும் கால்களும் விறைத்த நிலையில் இருந்தது. கண்கள் மூடியும், வாய் மூடியும் இருந்தது. நாக்கு உள்ளே இருந்தது. அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

**வெளிப்புற காயங்கள்**

1. தலை மற்றும் முகம் சிதைந்துள்ளது.

2. மண்டைஓட்டு எலும்புகள் முறிந்திருந்தது.

3. 4 x 1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் தலையின் மேல்பகுதியில் காணப்பட்டது.

4. 10 x 10 செ.மீ அளவிலான இரத்தம் உறைந்த காயங்கள் இடது காதில் காணப்பட்டது.

5. 4 x 1/2 x1/2 அளவிலான கிழிந்த காயம் இடது பக்க காதில் காணப்பட்டது.

6. 3 x 2 x 2 அளவிலான செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் வலது பக்க புருவத்தின் மேல் காணப்பட்டது.

7. இடது கையில் 2வது மெட்டா கார்ப்பல் என்ற எலும்பு முறிந்து வெளியே காணப்பட்டது.

**உட்புற காயங்கள்**

1. மண்டை ஓட்டை திறந்து பார்த்தபோது மூளை நசுங்கி இரத்த கசிவுடன் காணப்பட்டது.

2. மண்டை ஒட்டின் வழியாக மூளையின் ஒரு பகுதி வெளியே வந்திருந்தது.

3. வலது மற்றும் இடது பக்க மண்டை ஓட்டில் எலும்புகள் முறிந்தும் இடம் மாறியும் காணப்பட்டது.

4. மார்பில் உள்ள விலா எலும்பு மற்றும் நெஞ்சு எலும்பு நன்றாக இருந்தது.

5. இருதயம் வெளிறி இருந்தது. அதன் உள்ளே இரத்தம் ஏதும் காணப்படவில்லை.

6. நுரையீரல் வெளிறி இருந்தது.

7. வயிற்று பகுதி வெளிறி காணப்பட்டது. 300 கி அளவிலான செரிமானம் ஆகாத உணவுப்பொருள் இருந்தது.

8. கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் வெளிறி காணப்பட்டது.

9. சிறு மற்றும் பெருங்குடல் காற்று அடைபட்டு உப்பி இருந்தது.

10. இடுப்பு எலும்பு மற்றும் தண்டுவடம் நன்றாக இருந்தது.

பிரேத பரிசோதனை 13.04.2011 பிற்பகல் 2.15 நிமிடத்தில் நிறைவடைந்தது. இறப்பின் நேரம் சுமார் 12லிருந்து 16 மணி நேரம் பிரேத பரிசோதனைக்கு முன்பு ஏற்பட்டிருக்க கூடும்.

மேற்குறிப்பிட்ட காயங்களாலும், மற்றும் அதனால் ஏற்பட்டிருக்கும் இரத்த போக்கினாலும் மற்றும் அதிர்ச்சியினாலும் மரணம் ஏற்பட்டிருக்க கூடும் என்று நான் என் இறுதி கருத்துரையை வழங்கியுள்ளேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை

அ.சா.ஆ.11 ஆகும். அதிலேயே வழங்கப்பட்டுள்ள இறுதி கருத்துரை அ.சா.ஆ.12 ஆகும். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஒரே நாளிலேயே பிரேத விசாரணை அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை வழங்கியுள்ளேன். இந்த வழக்கில் உள்ளுறுப்புகளை எடுத்து அதில் விசம் உள்ளதா என்பதை கண்டறிய பரிசோதனைக்கு அனுப்பவில்லை. ஆய்வாளர் என்னை அன்றே விசாரித்திருப்பார். எனக்கு சரியாக ஞாபகமில்லை. ஆய்வாளர் என்னிடம் இந்த காயங்கள் எந்த ஆயுதத்தால் ஏற்பட்டது என்பது குறித்து ஆயுதங்களை காட்டி என்னிடம் விசாரிக்கவில்லை. எனது பிரேத பரிசோதனையில் கேஸ் இஸ்டரி சொல்லப்படவில்லை. தடியால் ஒருவர் பக்கத்தில் இருந்து அடித்தால் 2ம் அடிக்கு மேல் இரத்தம் தெறிக்க வாய்ப்புள்ளது என்றால் உள்ளது. இந்த காயங்கள் தடியை தவிர சுத்தியாலும், சம்மட்டியாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். இறப்பு நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்தவரின் உடலில் எண்ணற்ற அடிகள் உள்ளது. நான் உள்ளுறுப்பு பரிசோதனைக்கு அனுப்பி இருந்தால்தான் இறப்பிற்கான உண்மையான காரணம் தெரிந்திருக்கும் என்றும், இறந்தவர் விசத்தின் காரணமாக கூட இறந்திருக்கலாம் என்றும் சொன்னால் சரியல்ல.

**3**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

தாக்கப்பட்டதில் எது கொடுங்காயம் எது சாதாரண காயம் என்று நான் சொல்லவில்லை. தாக்கப்பட்டவருக்கு எத்தனை காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இறந்தவருக்கு காயம் மழுங்கிய ஆயுதத்தால் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது. தலை மற்றும் முகத்தில் ஏற்பட்ட சிதைந்த காயங்கள் மற்றும் எலும்பு முறிவு மழுங்கிய ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கூர் முனை உள்ள ஆயுதங்களால் தாக்கப்பட வாய்ப்பு இருந்ததா என்றால் இடது பக்க காதில் ஏற்பட்ட கிழிந்த காயம் கூர் முனை ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இறந்தவருக்கு தலையில் வலது இடது பக்கம் முழுவதும் காயங்கள் உள்ளது. இறந்தவருக்கு முகத்தில் காதில் கிழிந்த காயம் இருந்தது. அவர் கீழே விழுந்ததால் புருவங்களில் சிராய்ப்பு காயம் உள்ளது. இது போன்று இவ்வளவு காயங்களை ஏற்படுத்த வேண்டும் என்றால் எத்தனை பேர் சேர்ந்து ஏற்படுத்த வேண்டும் என்றால் குறைந்தது 5 பேராவது இருக்க வேண்டும். காயத்திலிருந்து மண் போன்ற பொருட்களை கைப்பற்றினோமா என்றால்

அதுகுறித்து அறிக்கையில் இல்லை. எந்த விதமான திடப்பொருளும் காயங்களில் இருந்து சேகரிக்கப்படவில்லை என்றால் சரிதான். பரிசோதனை நேரத்திற்கு முன்பு காயங்கள் எவ்வளவு நேரத்திற்கு முன்பு ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் அதுபோன்று சொல்லவில்லை. இறந்தவரின் உடலில் மது அளவு எவ்வளவு உள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

மறுவிசாரணை

இல்லை